**OS.No.79/2022**

**PW1 –வேலுசாமி**

**த/பெ.பெரியாண்டி**

**நாள். 11.03.2025.**

**வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதிதரப்பில்குறுக்குவிசாரணை**

1. நான் சுமார் 35 ஆண்டுகளாக மாநகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வருகிறேன்.நான் வருமான வரி கணக்கு வைத்திருக்கிறேன்.பிரதிவாதி எனக்கு சொந்தம் தான்.அவரும் துப்புரவு பணி தான் செய்து வருகிறார்.தற்போது எங்கே என்ன வேலை செய்து கொண்டு வருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது.நாங்கள் இருவரும் மாமன் மச்சான் உறவு முறை கொண்டவர்கள் தான்.

2. என்னுடைய மகளை பிரதிவாதியின் மகன் மகனுக்கு திருமணத்திற்காக கேட்டார் என்றும் அதற்கு நான் கொடுக்க மறுத்து விட்டதால் அன்று முதல் பேச்சு வார்த்தை எங்களுக்குள் இல்லை என்று சொன்னால் சரி அல்ல. எங்கள் இருவருக்கும் வரவு செலவுகள் இருந்து கொண்டு தான் இருந்தது என்றால் இல்லை. 5 லட்சம் ரூபாய் என்பது எனக்கு ஒரு பெரிய தொகை தான் என்றால் சரிதான். முதன் முதலில் நான் வழக்கறிஞர் அறிவிப்பு 2.6.2019 என்ற தேதியில் தான் ப்ரோனோட் கொடுத்ததாக குறிப்பிட்ட அனுப்பியிருக்கிறேன் என்று சொன்னால் முதலில் அப்படித்தான் அனுப்பி இருக்கிறேன் ஆனால் அதற்கு பின்பு அதில் பிழை திருத்தம் இருக்கிறது நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பும்போது பிராமிசரி நோட் என்ற ஒன்று இல்லை என்று சொன்னால் சரியல்ல வழக்குக்காக பின்னால் உருவாக்கப்பட்டதுதான் அந்த பிராமிஸ்வரி நோட்டு என்று சொன்னால் சரி அல்ல.

3. பிராமிசரி நோட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியுடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல.பிராமிசரி நோட்டு தேதியன்று என் கைவசம் ரூபாய் 5 லட்சம் இருந்ததற்கான ஆவணம் ஏதும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

ராமன் என்பவர் பிரதிவாதியின் பேரன் ஆவர். எனக்கு அவர் சொந்தம் கிடையாது. சங்கர் குமார் சாட்சி கையெழுத்து போட்டவர். சங்கர் குமார் மற்றும் ராமன் ஆகியோர் ஆவணங்களில் கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல .

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V SREE VIDYA

Digitally signed by V SREE VIDYA
DN: cn=V SREE VIDYA, ou=JUDICIAL JUDGE , o=THE PRINCIPAL SUBORDINATE COURT , l=TIRUPPUR, st=TAMIL NADU, c=91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.